# நேரு நினைவுக் கல்லூரி

## (தன்னாட்சி)

தேசிய தர மதிப்பீட்டுக் குழுமத்தால் "A" தரச் சான்றிதழ் பெற்றது

(திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது)

**புத்தனாம்பட்டி-621 007. திருச்சிராப்பள்ளி மாவட்டம்.**





நாட்குறிப்பு : 2015-2016



*Chemistry Lab*



*C.V.R.Dining Hall*



*Computer Lab*

# நேரு நினைவுக் கல்லூரி

(தன்னாட்சி)

தேசிய தர மதிப்பீட்டு குழுமத்தால் "A" தரச்சான்றிதழ் வழங்கப்பட்டது.

புத்தனாம்பட்டி – 621 007,
திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

பெயர் ______________________

வ. / ப. எண் ______________________

வகுப்பு ______________________

## நாட்குறிப்பு
## 2015 - 2016

Phone : 04327 - 234227    Fax : 04327 - 234811
E-mail : info@nmc.ac.in    Website : www.nmc.ac.in

# பொருளடக்கம்


| வ. எண். | விபரங்கள் | பக்கம் |
|---|---|---|
| 1. | தேசிய ஒருமைப்பாட்டு உறுதிமொழி, தமிழ்த்தாய் வாழ்த்து | 1 |
| 2. | கல்லூரி வாழ்த்து | 2 |
| 3. | தேசிய கீதம் | 3 |
| 4. | கல்லூரி வரலாறு | 4 |
| 5. | கல்லூரி மேலாண்மைக் குழு | 5 |
| 6. | கல்லூரி நிர்வாகக் குழு | 6 |
| 7. | மாணவர்களுக்கான பொது விதிமுறைகள் | 7 |
| 8. | கல்லூரியின் விதிகள் | 11 |
| 9. | கல்வி உதவித் தொகைகள் | 24 |
| 10. | கல்லூரி மாணவர் பேரவை அமைப்பு விதிமுறைகள் | 31 |
| 11. | தேர்வு நெறியாளர் அலுவலகம் | 38 |
| 12. | மாணவர்களுக்கான விடுதிகள் | 43 |
| 13. | மாணவர்களுக்கான பிற அமைப்புகள் | 43 |
| 14. | தர உத்திரவாத உள்ளமைப்பு | 44 |
| 15. | தேர்வுகள் அட்டவணை | 46 |
| 16. | தேர்வுசார் குற்றங்களும் தண்டனைகளும் | 47 |
| 17. | நாட்காட்டி | 50 |

# I. தேசிய ஒருமைப்பாட்டு உறுதிமொழி

"நாட்டின் உரிமை வாழ்வையும், ஒருமைப்பாட்டையும் பேணிக்காத்து வலுப்படுத்தச் செயற்படுவேன் என்று உளமார நான் உறுதி கூறுகிறேன்."

"ஒரு போதும் வன்முறையை நாடேன் என்றும் சமயம், மொழி, வட்டாரம் முதலியவை காரணமாக எழும் வேறுபாடுகளுக்கும், பூசல்களுக்கும், ஏனைய அரசியல் பொருளாதாரக் குறைபாடுகளுக்கும் அமைதி நெறியில் அரசியல் அமைப்பின் வழி நின்று தீர்வு காண்பேன் என்றும் நான் மேலும் உறுதியளிக்கிறேன்."

## தமிழ்த்தாய் வாழ்த்து

*நீராருங் கடலுடுத்த நிலமடைந்தக் கெழிலொழுகும்*
*சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமிதில்*
*தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்*
*தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே*
*அத்திலக வாசனைப்போல் அனைத்துலகும் இன்பமுற*
*எத்திசையும் புகழ்மணக்க இருந்த பெருந் தமிழணங்கே !*
*உன் சீரிளமைத் திறம்வியந்து செயல் மறந்து*
*வாழ்த்துதுமே ! வாழ்த்துதுமே ! வாழ்த்துதுமே !*

"மனோன்மணீயம்" பெ. சுந்தரம்பிள்ளை

## II. கல்லூரி வாழ்த்து

இராகம் : ஹித்தோளம் * ஆதி தாளம்

1. நீரும் நிலமும் உள்ளளவும்
நெஞ்சில் நேர்மை உள்ளளவும்
நேரு நினைவுக் கல்லூரி
நிலவுக நிலவும் கதிராம் போல்.

2. புத்தனாம்பட்டி மூக்கப்பிள்ளை - நம்
பொன்னித்தாயின் மூத்தபிள்ளை
நேரு நினைவுக் கல்லூரி - அவர்
நெஞ்சில் சுரந்த காவேரி.

3. திரை கடலோடியும் திரவியம் தேடி - தந்
தேகம் அடைந்த பலனைப் பெற்று
நிறை குடமாக்கும் கல்விக்கே - தன்
நிதியை நீராய்ப் பாய்ச்சி விட்டார்.

4. வாழ்க அவர்தம் தொண்டு பல
வாழ்க அவர் புகழ் நீள் புவியில்
வாழ்க நேரு நினைவுக் கல்லூரி
வென்று புலமை சிறந்திடவே (நீரும்)



## III. தேசிய கீதம்

*ஜன கண மன அதிநாயக ஜயஹே*
*பாரத பாக்ய விதாதா*

*பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா*
*திராவிட உத்கல வங்கா*

*விந்திய ஹிமாசல யமுனா கங்கா*
*உச்சல ஜலதி தரங்கா*

*தவ சுப நாமே ஜாகே*
*தவ சுப ஆசிஸ மாகே*
*காஹே தவ ஜய காதா*

*ஜன கண மங்கள தாயக ஜய ஹே*
*பாரத பாக்ய விதாதா*

*ஜய ஹே ஜய ஹே ஜய ஹே*
*ஜய ஜய ஜய ஜய ஹே !*

## IV. கல்லூரி வரலாறு

புத்தனாம்பட்டி நேரு நினைவுக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட ஒரு முதல்நிலைக் கல்லூரியாகும். தன்னலமற்ற மறைந்த திரு. எம். மூக்கப்பிள்ளை அவர்கள் இக்கல்லூரியைத் தோற்றுவித்தவர் ஆவார். 1942 ஆம் ஆண்டு தொடக்கத்தில் ஸ்ரீ சண்முகநாதன் துவக்கப்பள்ளியின் நிர்வாகப் பொறுப்பை ஏற்ற அவரின் பெரும் முயற்சியில் ஓர் உயர்நிலைப் பள்ளியும், ஒரு கல்லூரியும் உருவாகியது மட்டுமல்லாமல் விரைவான முன்னேற்றத்தையும் அடைந்தது.

இக்கல்லூரி நகரச் சந்தடியிலிருந்து விலகி அமைதியான கிராமச் சூழ்நிலையில் அமைந்திருக்கிறது. மறைந்த முன்னாள் முதல்வர் சி.என். அண்ணாதுரை, எம்.ஏ., அவர்களால் 1967 ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 29 ஆம் நாள் தொடங்கி வைக்கப் பெற்றது என்பது மிகவும் பெருமைக்குரியது.

முக்கியமாக இக்கல்லூரி இவ்வட்டார மக்களின் மேற்படிப்புக்காக அமைந்திருந்தாலும், கல்லூரிப் படிப்பில் ஆர்வமுள்ள ஆண், பெண் இருபாலர்களும் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

2004 - 05 ஆம் கல்வியாண்டு முதல் இக்கல்லூரி பல்கலைக்கழக மானியக் குழுவினரால் தன்னாட்சிக் கல்லூரியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

2012 - 2013 ஆம் கல்வியாண்டில் இக்கல்லூரிக்கு தேசிய தர மதிப்பீட்டுக் குழுமத்தால் (NAAC) "A" தரச்சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.



## V. கல்லூரி மேலாண்மைக் குழு

நேரு நினைவுக் கல்லூரி மேலாண்மைக்குழு, சங்கங்கள் பதிவுச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட அமைப்பு ஆகும். இக்குழு, கல்வி முகமை (Educational Agency) மூலம் கல்லூரியை நிர்வாகம் செய்கிறது. கல்வி முகமையில் கீழ்க்கண்டவர்கள் உறுப்பினர்களாக உள்ளனர்.

### தலைவர்

**திரு. மூ. பொன்னம்பலம், M.A., M.Sc.,**

### செயலர்

**திரு. பொன். பாலசுப்ரமணியன் B.E.,**

### செயற்குழு உறுப்பினர்கள்

**திருமதி. பொன். சிவனேஸ்வரி**

**திரு. அரு. லோகநாதன், B.Com.,**

**திரு. பொன். இரவிச்சந்திரன், M.Com.,**

**திருமதி. தேன்மொழி தங்கராஜா, B.A.,**

## VI. கல்லூரி நிர்வாகக் குழு

1976 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் கல்லூரிகள் ஒழுங்காற்றுச் சட்டத்தின் கீழ் கல்லூரியின் அன்றாட அலுவல்களை நிர்வகிக்க கல்லூரி நிர்வாகக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

### தலைவர்

**திரு. பொன். பாலசுப்ரமணியன், B.E.,**

### செயலர்

**திரு. பொன். இரவிச்சந்திரன், M.Com.,**

### உறுப்பினர்கள்

திரு. மு. பொன்னம்பலம், M.A., M.Sc.,

திருமதி. பொன். சிவனேஸ்வரி, கல்வி முகமையின் பிரதிநிதி.

திரு. அரு. லோகநாதன், B.Com., கல்வி முகமையின் பிரதிநிதி.

திருமதி. தேன்மொழி தங்கராஜா, B.A., கல்வி முகமையின் பிரதிநிதி.

முனைவர். S. ஆறுச்சாமி, பல்கலைக் கழகப் பிரதிநிதி.

முனைவர். S. முருகேசன், M.Com., M.Phil., Ph.D.,

துறைத்தலைவர் வணிகவியல் துறை, ஆசிரியப் பிரதிநிதி.

திரு. K. நாகராஜன், M.Sc., M.Phil., ஆசிரியப் பிரதிநிதி.

திரு. மு. கோவிந்தராஜ், M.A., அலுவலகக் கண்காணிப்பாளர்.

### கல்லூரி முதல்வர்

முனைவர். தி. ஜெயப்பிரகாசம், M.Com., M.Phil., Ph.D.,



## VII. மாணவ / மாணவியர்களுக்கான பொது விதிமுறைகள்

1. ஒவ்வொரு மாணவரும் தூய்மையான, நமது பண்பாட்டிற்குக் குறைவு ஏற்படுத்தாத ஆடைகளை அணிந்து வரவேண்டும்.

2. கல்லூரி வளாகத்திலும் கல்லூரிக்கு வெளியிலும் ஆசிரியர்களிடம் மாணவர்கள் பண்போடும், பணிவோடும் நடந்து கொள்ள வேண்டும்.

3. கல்லூரிப் பணியாளர்கள், அலுவலர்கள் ஆகியோரிடம் பண்போடு நடந்து கொள்ள வேண்டும்.

4. கல்லூரியில் பயிலும் மாணவியர்களைக் கேலி செய்தல், அவர்களைத் தொடர்ந்து சென்று தொல்லை கொடுத்தல், அவமானப்படுத்தும் வகையில் நடந்து கொள்ளுதல் ஆகியவை கடுமையான குற்றங்களாகக் கருதப்பெற்றுக் கடுமையான தண்டனை வழங்கப்படும்.

5. முதலாமாண்டு மாணவர்களைக் கேலி வதை (Ragging) செய்யும் மாணவர்கள் கடுமையான தண்டனைக்கு உட்படுத்தப்படுவார்கள். கேலிவதை செய்வது சட்டப்படி குற்றமாகும். மீறி செய்தால் அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

கல்லூரி வளாகத்துக்குள் எந்நேரமும் அனைத்து மாணவரும் அடையாள அட்டையை கழுத்தில் அவசியம் அணிந்திருத்தல் வேண்டும். அவ்வாறு அணிந்திரா விட்டால் அம்மாணவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

6. முதல் மணி அடித்தவுடன் மாணவர்கள் உரிய வகுப்பறைக்குள் சென்று அமர வேண்டும். வகுப்பறைக்குள் செல்லாமல் அலைந்து கொண்டிருக்கும் அல்லது கூட்டமாகக் குழுமி நின்று கொண்டிருக்கும் மாணவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

7. கல்லூரி வளாகத்தில் அமைதியாக நடந்து கொண்டு அமைதியைப் பராமரிப்பது மாணவர்களின் கடமையாகும்.

8. ஆசிரியர் வகுப்பறையில் நுழையும்போது மாணவர்கள் அனைவரும் அமைதியாக எழுந்து மரியாதை செலுத்த வேண்டும். அவர் கூறியபின் இருக்கையில் அமரவேண்டும்.

9. இரண்டு நிமிடம் தாமதமாக வரும் மாணவர்கள் உரிய ஆசிரியரின் இசைவுபெற்று உள்ளே நுழைய வேண்டும். 2 நிமிடத்திற்கு மேல் 10 நிமிடத்திற்குள் தாமதமாக வரும் மாணவர்கள் தகுந்த காரணங்களின் அடிப்படையில் முதல்வரிடம் அனுமதிச்சீட்டுப் பெற்று உரிய ஆசிரியரிடம் சமர்ப்பித்து உள்ளே செல்ல வேண்டும்.

10. வகுப்பு நடந்து கொண்டிருக்கும்போது ஆசிரியரின் அனுமதியின்றி எந்த மாணவரும் வகுப்பைவிட்டு வெளியில் செல்லக்கூடாது.

11. ஒரு வகுப்பறையிலிருந்து மற்ற வகுப்பறைக்கு அமைதியாக மாறிச் செல்லவேண்டும். எல்லா மாணவ, மாணவியரும் அறையை விட்டு செல்லும் முன் / கல்லூரி கடைசி வகுப்பு முடிந்து செல்லும் முன் சுழன்று கொண்டிருக்கும் மின் விசிறிகளையும், குழல் விளக்குகளையும் நிறுத்திவிட்டு செல்ல வேண்டும்.

## மாணவ/மாணவியர்களுக்கான சிறப்பு அறிவுறுத்தல்கள்

1. காலை முதல் மணி அடித்தபிறகுதான் மாணவியர்கள் வகுப்பறைக்கு வருதல் வேண்டும்.
2. வகுப்புகள் முடிந்தவுடன் மாணவியர்கள் வகுப்பு அறைகளில் இருத்தல் கூடாது. அவர்கள் விடுதிக்கோ / ஓய்வறைக்கோ உடனே சென்றுவிட வேண்டும்.
3. மாணவியர்கள், மாணவர்களோடு வகுப்பறைகளில் தேவையில்லாமல் பேசுவதோ / நோட்டு புத்தகங்கள் கொடுப்பதோ / பெறுவதோ தவிர்க்கப்பட வேண்டும்.
4. மாணவியர்கள் கல்லூரிக்கு வரும்போது விலை உயர்ந்த நகைகளை அணிந்து வரவேண்டாம் என அறிவுறுத்தப்படுகிறது.



12. ஒரு வகுப்பு முடிந்து அடுத்த வகுப்பிற்கான ஆசிரியர் வரும் வரை மாணவர்கள் வகுப்பறையில் அமைதியாக இருக்கவேண்டும். எக்காரணத்தை முன்னிட்டும் வகுப்பறையை விட்டு வெளியே வந்து நிற்கக் கூடாது. அவ்வாறன்றி, வகுப்பறையை விட்டு வெளியே சென்றுவிட்டு அடுத்த வகுப்பிற்குக் காலதாமதமாக வரும் மாணவர்கள் வகுப்பறைக்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

13. மாணவர்கள் எந்தக் காரணத்திற்காகவும் கல்லூரி அலுவலகத்திற்குள் நுழைய அனுமதி கிடையாது.

14. கல்லூரிக்குச் சொந்தமான கட்டிடங்கள், மரத்தினாலான பொருட்கள், மின்சாதனங்கள் முதலியவற்றிற்குச் சேதத்தை ஏற்படுத்தும் மாணவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும். சேதமடைந்த பொருட்கள் சேதம் விளைவித்த மாணவரின் செலவிலேயே புதுப்பிக்கப்படும். சேதப்படுத்திய மாணவர்களைக் கண்டுபிடிக்க முடியாத சூழ்நிலையில் மதிப்புக்குரிய தொகையும் உரிய அபராதமும் அனைத்து மாணவர்களிடமிருந்தும் வசூலிக்கப்படும்.

15. கல்லூரி நடந்து கொண்டிருக்கும் நேரத்தில் எந்த மாணவரும் தாழ்வாரத்தில் அலையக்கூடாது.

16. மாணவர்கள் கல்லூரித் தகவல்பலகையில் உள்ள செய்திகளைத் தினமும் படித்து அறிந்துக் கொள்ள வேண்டும். தகவல் பலகையில் அறிவிக்கப்பட்ட செய்திகளை அறியாததால் மாணவர்களுக்கு ஏற்படும் இழப்புகளுக்கு கல்லூரி முதல்வரோ, அலுவலகமோ பொறுப்பேற்க முடியாது.

17. கல்லூரி வளாகத்தில் மாணவர்கள் நடத்தும் கூட்டங்கள், விழாக்களுக்கு குறைந்தது ஒருவார காலத்திற்கு முன்பே எழுத்து மூலம் முதல்வரிடம் அனுமதி பெற வேண்டும். அனுமதி பெற்ற கூட்டங்கள் அனுமதி பெற்ற

காலத்தில் நடத்தப்படவில்லையென்றால், அது குறித்த விவரமும் உடனடியாக முதல்வருக்கு எழுத்து மூலம் தெரிவிக்கப்படவேண்டும். கூட்டங்கள் ஒத்திவைக்கப்பட வேண்டிய சூழ்நிலை ஏற்படுமானால், அதற்குரிய சூழ்நிலைகளை எழுத்துமூலம் விளக்கி முதல்வரிடம் மறு அனுமதி பெற வேண்டும். கல்லூரி முதல்வரிடம் எழுத்து மூலம் அனுமதி பெறாமல், எவ்விதக் கூட்டமும் கல்லூரி வளாகத்தில் நடைபெறக்கூடாது.

18. மாணவர்களால் நடத்தப்படும் கூட்டங்கள், விழாக்கள் முதல்வர் மற்றும் ஆசிரியர்களின் முன்னிலையிலேயே நிகழ்த்தப்பெற வேண்டும். ஆசிரியர்கள் முன்னிலை வகிக்காத கூட்டங்களுக்கோ, விழாக்களுக்கோ கண்டிப்பாக அனுமதி அளிக்கப்பட மாட்டாது. இவ்விதியை மீறுவோர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு கடுமையான தண்டனை வழங்கப்படும்.

19. மாணவர்கள் தங்கள் குறைகளை, பிரச்சனைகளை மாலை 4.00 மணிக்குமேல் முதல்வரைச் சந்தித்துத் தெரிவிக்கலாம். முன்னறிவிப்பின்றியும் எழுத்து மூலம் தெரிவித்து உரிய கால அவகாசம் அளிக்காமலும் வகுப்புகளைப் புறக்கணித்தல், பிற மாணவர்களை வகுப்புகளைப் புறக்கணிக்கத் தூண்டுதல், வேலை நிறுத்தத்தில் ஈடுபடுதல், பிற மாணவர்களை வேலை நிறுத்தத்தில் ஈடுபடத் தூண்டுதல் குற்றமாகும். மேற்கண்ட செயல்களில் ஈடுபடும் மாணவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு உரிய தண்டனை வழங்கப்படும்.

20. மாணவர்களின் நடத்தை கல்லூரி வளாகத்திலும், கல்லூரிக்கு வெளியிலும் திருப்திகரமாக இல்லாவிட்டால், அத்தகைய நன்னடத்தை இல்லாத மாணவர்கள்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு உரிய தண்டனை வழங்கப்படும்.



21. சாதி, மத அரசியல் தொடர்பான செயல்களில் ஈடுபடும் மாணவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்படுவார்கள். மேற்கண்ட செயல்களில் ஈடுபடும் மாணவர்களின் கல்வி உதவித் தொகை மற்றும் கட்டணச் சலுகைகள் விலக்கிக் கொள்ளப்படும்.

22. முதல்வரின் அனுமதியின்றி கல்லூரி வளாகத்தில் சுற்றறிக்கைகள் விடுவதோ விளம்பரங்கள் செய்வதோ கூடாது. மேற்கண்ட செயல்களில் ஈடுபடுவோர் கடுமையான தண்டனைக்கு உட்படுத்தப்படுவர்.

23. முதல்வரின் அனுமதியில்லாமல் கல்லூரி வளாகத்தில் நன்கொடைகள் வசூலிக்கக்கூடாது.

24. கல்லூரி வளாகத்தைத் தூய்மையாக வைத்திருப்பது மாணவர்களின் கடமையாகும். மேற்கண்ட விதிமுறைகளை மீறுவோர் மீது நடவடிக்கை எடுப்பதற்கு முதல்வருக்கு அதிகாரம் உண்டு. தமிழ்நாடு அரசு கல்வி விதிகளின்படி குற்றம் செய்வோருக்கு அபராதம் விதிக்கவோ, இடமாற்றம் செய்யவோ அல்லது வருகைச் சான்றிதழை (Attendance Certificate) நிறுத்தி வைக்கவோ, தேர்வு எழுதுவதற்கு அனுமதி மறுக்கவோ, தற்காலிகமாக அல்லது நிரந்தரமாகக் கல்லூரியிலிருந்து நீக்கவோ முதல்வருக்கு முழு அதிகாரம் உண்டு.

25. கல்லூரி வளாகத்திற்குள் மாணவ, மாணவிகள் அலைபேசி (CELL PHONE) பயன்படுத்த தடை விதிக்கப்பட்டுள்ளது.

## VIII. கல்லூரியின் விதிகள்

கல்வியாண்டு இரண்டு பருவங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. முதற்பருவம், கோடை விடுமுறைகளுக்குப் பிறகு கல்லூரி திறக்கப்பெற்ற நாள் முதல் "90 கல்லூரி வேலை நாட்கள்" முடியும் வரை நடைபெறும். இரண்டாவது பருவம், முதற்பருவ விடுமுறைக்குப் பின் கல்லூரி திறக்கப்பெற்ற நாள் முதல் "90 கல்லூரி வேலை நாட்கள்" முடியும் வரை நடைபெறும்.

படிப்புக் கட்டணம் ஒவ்வொரு ஆண்டுத் தொடக்கத்திலும் கல்லூரி அட்டவணையில் குறிப்பிடப்படும் தேதி அல்லது அதற்கு முன்பாகவோ செலுத்தப்படவேண்டும். மாணவர்கள் குறிப்பிட்ட தேதியில் கட்டணத்தைச் செலுத்தத் தவறினால் ஒவ்வொரு வேலை நாட்களுக்கு ரூபாய் ஒன்று வீதம் அபராதத்துடன் செலுத்த வேண்டும். அபராதத்துடன் செலுத்துவதற்குரிய கடைசித் தேதியிலும் செலுத்தத் தவறிவிட்டால் அவர்களுடைய பெயர் வருகைப் பதிவேட்டில் இருந்து நீக்கப்படும். மறுமுறை கல்லூரியில் சேர வேண்டுமானால் கல்வித்தொகை, அபராதத் தொகை இவற்றுடன் மறுசேர்க்கைக் கட்டணமாக ரூபாய் ஐநூறும் சேர்த்துச் செலுத்த வேண்டும்.

கட்டணங்களை கல்லூரி அலுவலகத்தில் காலை 9.30 மணி முதல் மாலை 4.30 வரை எல்லா வேலை நாட்களிலும் செலுத்தலாம். கட்டணம் செலுத்தும்போது மாணவர்கள் வரிசையில் நின்றுதான் செலுத்தவேண்டும். பணம் செலுத்தியதற்கான இரசீதை மாணவர்கள் பெற்றுப் பத்திரமாக வைத்திருக்க வேண்டும்.

பருவமுறை தேர்வுக்கட்டணம் பொதுவாக, தேர்வுமுடிவுகள் வெளிவந்த 15 நாட்களுக்குள் செலுத்தப்பட வேண்டும். இதற்கான அறிவிப்பு கல்லூரி தகவல் பலகையில் அறிவிக்கப்படும். குறிப்பிடப்பட்ட தேதிக்கு முன்பாகவே தேர்வுக் கட்டணங்களைச் செலுத்துதல் நலம். காலம் தாழ்த்தித் தேர்வுக் கட்டணம் செலுத்தும் மாணவர்களின் விண்ணப்பங்களையும், தேர்வுக் கட்டணம் செலுத்தாத மாணவர்களும் தேர்வு எழுத அனுமதிக்கப்படமாட்டார்கள்.



## கட்டணச் சலுகைகள்

1. ஆதிதிராவிடர், மலைவாழ் மக்கள், கிறித்துவ மதம் மாறிய தாழ்த்தப்பட்டவர்கள் அனைவரும் 92 த.க. விதியின் கீழ் முழுக்கட்டணச் சலுகை (பயிற்சிக் கட்டணம், தேர்வுக்கட்டணம், சிறப்புக் கட்டணம்) பெறத் தகுதி உள்ளவர்கள். அவர்களின் பெற்றோர் / பாதுகாவலரின் ஆண்டு வருமானம் இந்த சலுகையைப் பாதிக்காது. திருத்தி அமைக்கப்பட்ட சாதிச் சான்றிதழ் கொடுத்து முழுக் கட்டணச் சலுகை பெறலாம்.

2. அனைத்து தாழ்த்தப்பட்ட, மலைவாழ்சாதி (கிறித்துவ மதம் மாறியவர்கள் உட்பட) முதுநிலை பயிலும் மாணவர்கள் முழுக்கட்டணச் சலுகை (பயிற்சிக் கட்டணம் மட்டும்) பெறத் தகுதியுள்ளவர்கள் ஆவர். இச்சலுகை அவர்களுடைய பெற்றோர், பாதுகாவலர் ஆண்டு வருமானத்தைக் கருத்தில் கொள்ளாது அளிக்கப்படும்.

3. பட்டப்படிப்பு பயிலும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர் மரபினர் மாணவ, மாணவிகள் தங்கள் பெற்றோர் ஆண்டு வருமானத்தைக் கணக்கில் கொள்ளாது. அரசு ஆணை எண் 658 / பி.ந.ச. 21 நாள் 25.07.89 - ன் படி முழுக்கட்டணச் சலுகை பெறத் தகுதி உள்ளவர்கள். ஆனால் திருத்தி அமைக்கப்பட்ட சாதிச் சான்றிதழ் கொடுத்து முழுக் கட்டணச் சலுகை பெறலாம்.

## 4. தமிழக அரசின் மாணவியருக்கான இலவசக் கல்வித்திட்டம்

இத்திட்டத்தின்படி ஏழை மற்றும் நடுத்தர வகுப்பைச் சேர்ந்த முதலாமாண்டு பட்டப்படிப்பு மாணவிகளுக்கு இலவசக் கல்விச் சலுகை வழங்கப்படுகிறது.

பெற்றோர் அல்லது பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ. 24,000க்குக் குறைவாக உள்ள முதலாம் ஆண்டு பட்டப்படிப்பு மாணவிகள் இச்சலுகை பெறலாம். மேற்படி ஆண்டு வருமானச் சான்றிதழ் சம்மந்தப்பட்ட வட்ட ஆட்சியாளர் அல்லது உதவி வட்ட ஆட்சியாளரிடம் இருந்து பெற வேண்டும்.

வருமானச் சான்றிதழ் துணை வட்டாட்சியர் அல்லது அதற்கு மேற்பட்ட அதிகாரியால் ஒப்பமிடப் பட்டிருக்க வேண்டும்.

**குறிப்பு :**

1. 92 த.க. விதியின்கீழ் கட்டணச் சலுகை பெற விரும்பும் மாணவர்கள் அதற்கெனத் தயாரிக்கப்பட்ட படிவத்தை ரூ. 1.00 அலுவலகத்தில் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

2. அனைத்துக் கட்டணச் சலுகை விண்ணப்பங்களும், தேவையான சான்றிதழ்களுடன் கல்லூரி அலுவலகத்தில் ஆகஸ்டு 14 ஆம் தேதிக்கு முன்பாகச் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

3. கட்டணச் சலுகை பெறும் மாணவர்களின் வருகை நாட்கள் பருவத்திற்கு 81 நாட்களுக்குக் குறைவாக இருக்கக் கூடாது. வருகை நாட்கள் குறைந்தால் அவர்களுடைய கட்டணச் சலுகை விலக்கிக் கொள்ளப்படும்.

## வருகைப் பதிவு விதிமுறைகள்

1. கல்லூரி வளாகத்தினுள் இருக்கும் போது கல்லூரி அடையாள அட்டையை மாணவர்கள் அவசியம் அணிந்திருக்க வேண்டும்.

2. கல்லூரி பொதுவாக வாரத்திற்கு 5 நாட்கள் நடைபெறும். ஒவ்வொரு நாளும் காலை 9.30 மணி முதல் நண்பகல் 3.30 மணி வரை 5 பாட வேளைகளாகச் செயல்படும்.



3. ஒவ்வொரு பாடவேளையிலும் மாணவர்களின் வருகை பதிவு செய்யப்படும். வருகைப்பதிவு செய்யப்படும் பொழுது வகுப்பில் இல்லாத மாணவர்கள் வகுப்பிற்கு வராதவர்களாகவே குறிக்கப்படுவர்.

4. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பாடவேளையிலும் வருகை குறிக்கப்படும். காலைநேரம் மூன்று பாட வேளைகளையும் மாலைநேரம் இரண்டு பாட வேளைகளையும் கொண்டது. ஐந்து பாடவேளைகளுக்கும் வருகை தந்திருந்தால் மட்டுமே ஒருநாள் வருகைப்பதிவாகக் கணக்கில் கொள்ளப்படும். காலை வேளைக்குரிய மூன்று பாடவேளைகளில் ஏதேனும் ஒன்றிற்கு வராவிட்டாலும், அவ்வாறே மாலை வேளை இரு பாடவேளைகளிலும் ஒன்றிற்கு வராவிட்டாலும் அரைநாள் வராததாகக் கருதப்படும். மேற்கண்ட விதிமுறை ஐந்து பாட வேளைகளும் முழுமையாக நடக்கும் நாட்களுக்கு மட்டுமே பொருந்தும்.

5. வகுப்புகள் நடைபெறவில்லையெனில் (Cancellation of Class) நடைபெறாத வகுப்புகளினுடைய விவரத்தைத் துறைத் தலைவர் தகுந்த காரணங்களுடன் முதல்வருக்குத் தெரிவிப்பார். அக்காரணங்களின் அடிப்படையில் நடைபெறாத வகுப்புகளுக்கு மாணவர்களுக்குரிய வருகைப்பதிவு, முந்தைய மணியின் அடிப்படையிலோ அல்லது பிந்தைய மணியின் அடிப்படையிலோ வழங்கப்படும். துறைத்தலைவர்கள் தெரிவிக்காத நிலையில், மாணவர்கள் அனைவரும் வகுப்பிற்கு வராததாகவே கணக்கில் கொண்டு அந்த மணிக்கு வருகைப்பதிவு மாணவர்களுக்கு வழங்கப்படமாட்டாது.

6. கல்லூரிக்கு வரத்தவறிய மாணவர்கள் பட்டியலில், தவறுதலாகத் தம் பதிவு எண் இருப்பதைக் காணும் மாணவர்கள் தாமதமில்லாமல் முதல்வரிடம் எழுத்து மூலம் தெரிவித்து வருகைப்பதிவைச் சரி செய்து கொள்ள வேண்டும். கல்லூரி விழாக்கள், விடுதிப்பணிகள், நாட்டு நலப்பணித்திட்டம், தேசியமாணவர்படை மற்றும் கல்லூரி அலுவல்கள் தொடர்பாக வகுப்பிற்கு வர இயலாமல் வருகைப்பதிவு இழந்த மாணவர்கள் உரிய ஆசிரியரின் கையொப்பத்துடன் ஒரு வாரத்திற்குள் முதல்வரிடம் விண்ணப்பித்து வருகைப்பதிவு பெற வேண்டும். ஒரு வாரத்திற்குப் பின்வரும் வருகைப் பதிவு பெறுதல் குறித்த எத்தகைய விண்ணப்பமும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. அயற்பணிகளில் செல்லும் நாட்களின் எண்ணிக்கை பத்து நாட்களுக்கு மேல் அதிகமாகும் பொழுது முதல்வரின் முன் அனுமதி பெற வேண்டும். இதில் பின்னேற்பு எதுவும் வழங்கப்படமாட்டாது.

7. தொடர்ந்து பதினைந்து நாட்கள் தகுந்த காரணங்கள் இல்லாமல் கல்லூரிக்கு வரத்தவறிய மாணவர்களின் பெயர்கள் கல்லூரிப் பதிவேட்டிலிருந்து நீக்கப்படும்.

8. ஒவ்வொரு பருவத்திலும் 90 சதவீதம் வருகைப்பதிவு பெறாத மாணவர்களுக்கு அளிக்கப்பட்டு வரும் கல்வி உதவித் தொகைகள், படிப்புக் கட்டணச் சலுகைகள் விலக்கிக் கொள்ளப்படும். 75 சதவீதம் வருகைப்பதிவு பெறாத மாணவர்கள் தேர்வு எழுத அனுமதிக்கப்படமாட்டார்கள்.



## விடுப்பு விதிமுறைகள்

1. மாணவர் எவரும் விடுப்பு முன் அனுமதி பெறாமல் கல்லூரிக்கு வராமல் இருத்தல் கூடாது. எல்லா விடுப்பு விண்ணப்பங்களும் பெற்றோர், பாதுகாவலர் கையொப்பமிட்டுச் சம்மந்தப்பட்ட துறை உதவிப் பேராசிரியரால் பரிந்துரைக்கப்பட வேண்டும்.

2. கல்லூரி விடுதியில் தங்கியிருக்கும் மாணவர்களின் விடுப்பு விண்ணப்பங்கள் உரிய விடுதிக் காப்பாளரால் பரிந்துரைக்கப்பட வேண்டும்.

3. சரியான நேரத்தில் தகுந்த காரணத்துடன் விண்ணப்பிக்கும் மாணவர்களுக்கு விடுப்பு அனுமதி கொடுக்கப்படும். உடல்நலக் குறைவு மற்றும் தவிர்க்க முடியாத சூழ்நிலை காரணமாக 3 நாட்களுக்கு அதிகமாக விடுப்பு தேவைப்பட்டால், மருத்துவச் சான்றிதழ் அல்லது தேவையான மற்ற சான்றிதழ்களை மாணவர்கள் சமர்ப்பிக்க வேண்டும்.

4. கல்லூரி செயல்படும் நாட்களில் விடுதிகளில் இருந்துகொண்டு கல்லூரிக்கு வராத மாணவ, மாணவிகளிடம் ரூ.100/- அபராதம் வசூலிக்கப்படும்.

5. உடல் நலக்குறைவின் காரணமாக 3 நாட்களுக்கு மேல் கல்லூரிக்கு வரத்தவறிய மாணவர்கள் எழுத்து மூலம் முதல்வருக்குத் தெரிவிக்கவேண்டும். மேலும் விடுப்பு விண்ணப்பத்தை, அரசால் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவரால் கொடுக்கப்பட்ட சான்றிதழுடன் கல்லூரிக்கு வரும் நாளன்று சமர்ப்பிக்கவேண்டும். எக்காரணத்தை முன்னிட்டும் இவ்விதியை எவரும் மீறக்கூடாது.

6. உடல் நலக்குறைவு காரணமாகவோ அல்லது தவிர்க்க முடியாத சூழ்நிலை காரணமாகவோ 75 சதவீதத்திற்குக் குறைந்த வருகைப்பதிவு பெற்ற மாணவர்களைக் கீழ்க்கண்ட நிபந்தனைகளின்படி முதல்வர் மன்னிப்பளித்து தேர்வெழுத அனுமதிக்கலாம்.

(அ) மாணவர்களின் வருகைப்பதிவு ஒரு பருவத்தில் 54 நாட்களுக்கு மேல் 68 நாட்களுக்குள் இருக்குமானால் முதல்வரின் மன்னிப்புக்கோரி உரிய சான்றிதழ்களோடு விண்ணப்பித்து, உரிய கட்டணத்தையும் செலுத்தி முதல்வரின் அனுமதி பெற்று மாணவர்கள் தேர்வெழுதலாம்.

(ஆ) வருகைப்பதிவு குறைந்த மாணவர்களுக்கு மன்னிப்பு (Condonation) அளிப்பது முதல்வரின் உரிமையாகும். மாணவர்களின் நன்னடத்தை, அவர்களால் குறிப்பிடப்பெறும் காரணங்கள் ஆகியவற்றில் திருப்தி அடைந்தால் மட்டுமே மேற்கண்டவாறு மன்னிப்பளித்து பரிந்துரை செய்து தேர்வெழுத முதல்வர் அனுமதிப்பார். முதல்வரின் மன்னிப்புப் பெறுவதோ அல்லது பரிந்துரை பெறுவதோ மாணவர்கள் உரிமையல்ல.

(இ) 60 சதவீதத்திற்கும் குறைவாக வருகைப்பதிவு பெறும் மாணவர்கள் எக்காரணத்தை முன்னிட்டும் பருவத் தேர்வுகள் எழுத அனுமதிக்கப்படமாட்டார்கள். இவ்வாறு தேர்வு எழுத அனுமதிக்கப்படாத மாணவர்கள் துணைத் தேர்வுகளும் எழுத முடியாது. தவறுதலாக எவரேனும் தேர்வு எழுதியிருந்தால் அந்த மாணவரது தேர்வினை ரத்து செய்யவோ அல்லது முடிவுகளை நிறுத்தி வைக்கவோ முதல்வருக்கு அதிகாரம் உண்டு. இம்மாணவர்கள் பல்கலைக்கழகத்தில் அனுமதி பெற்று மீண்டும் அந்த பருவப் படிப்பை (Re - do) படிக்க வேண்டும்.

## சுற்றுலா விதிமுறைகள்

1. இளநிலை மற்றும் முதுநிலை விலங்கியல் துறை மாணவ, மாணவியர்களும், முதுநிலை இயற்பியல் துறை மாணவ, மாணவியர்களும் பாடத்திட்டம் தொடர்பான சுற்றுலாக்களுக்குத் துறைத் தலைவர் மற்றும் ஆசிரியர்களின் துணையுடன் அனுமதிக்கப்படுவர். இத்தகைய சுற்றுலாவில் பங்கேற்கும் மாணவியர் பெற்றோர் அனுமதி பெற்ற பின்னரே சுற்றுலாக்களுக்கு அனுமதிக்கப்படுவர்.



2. பாடத்திட்டம் அல்லாத பொதுவான கல்விச் சுற்றுலாக்களுக்கும் கீழ்க்கண்ட நிபந்தனைகளின் படி அனுமதி அளிக்கப்படும்.

(அ) சுற்றுலாக்கள் ஆசிரியர்களால் திட்டமிடப்பட்டு ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

(ஆ) அச்சுற்றுலாவுக்கு ஏற்பாடு செய்யும் ஆசிரியர்களே முழுப்பொறுப்பும் வகிக்க வேண்டும்.

(இ) சுற்றுலாக்கள் மாணவர்களுக்குத் தனியாகவும் / மாணவியர்களுக்குத் தனியாகவும் ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

(ஈ) பெற்றோர்களின் அனுமதி பெற்ற மாணவியர்களுக்கு மட்டுமே சுற்றுலாவில் பங்கு கொள்ள அனுமதி அளிக்கப்படும்.

(உ) எந்தவிதக் காரணத்தை முன்னிட்டும் எத்தகைய சூழ்நிலையிலும் மாணவ, மாணவியர் இணைந்து செல்லும் கல்விச் சுற்றுலாக்களுக்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது.

## உடற்பயிற்சிக் கல்வி

முதலாமாண்டு இளநிலை மாணவர்கள் கல்லூரியில் அங்கீகரிக்கப்பட்ட உடற்பயிற்சிக் கல்வியைப் பெறவேண்டும். மாணவர் வழக்கமான கல்வித் தகுதிகளுக்கு மேலாக உடற்பயிற்சிக்கான கல்வியை 75% வருகையுடன் பெற்றிருக்கிறார் என்று முதல்வர் சான்றிதழ் வழங்கவில்லை என்றால் அதுவரை வருடாந்திர வருகை முன்னேற்றச் சான்றிதழ் பூர்த்தியானதாகக் கருதப்படமாட்டாது. மேற்படி சான்றிதழ் வழங்கப்படுவதில் கீழ்க்காணும் மாற்று ஏற்பாடுகளும் சேர்ந்தவை.

(1) வெளி ஓட்டம் அல்லது விளையாட்டு (2) முறையான உடற்பயிற்சி. இந்த மாற்று ஏற்பாடு (1)ம் (2)ம் குறைந்தது 45 நிமிடம் நீடிக்கக்கூடிய வாரத்திற்கு இரண்டு வகுப்புகளுக்குக் குறையாமல் தொடரப்பட்டிருக்க வேண்டும்.

கல்லூரியில் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவ அதிகாரியால் உடற்கல்விக்குத் தகுதியில்லை என்று சான்று அளிக்கப் பட்டாலொழிய எந்த மாணவரும் உடற்பயிற்சிக் கல்வியிலிருந்து விலக்கு பெறமுடியாது.

## நூலகப் படிப்பறை விதிகள்

1. கல்லூரி வேலை நாட்களில் நூலகம் காலை 8.00மணியிலிருந்து மாலை 4.00 மணிவரை திறந்திருக்கும்.

2. நூலகம் சனி, ஞாயிறு மற்றும் பொது விடுமுறை நாட்களில் மூடப்பட்டிருக்கும்.

3. கோடை விடுமுறை நாட்களில் அறிவித்த நேரங்கள் மட்டுமே திறந்திருக்கும்.

4. ஒரே சமயத்தில் இரண்டு புத்தகங்களுக்கு மேல் ஒருவருக்கு வழங்கப்படமாட்டாது.

5. புத்தகங்களை நூலகத்திலிருந்து பெறுவதற்கு உரிய விண்ணப்பங்கள் நூலகரிடமிருந்து காலை 8.30 மணிக்குள் பெற்றுச் சமர்ப்பிக்கலாம். புத்தகங்கள் வழங்குதல் மற்றும் மாணவர்களிடமிருந்து திரும்பபெறதல் நூலகத் தகவல் பலகையில் அறிவிக்கப்படும்.

6. கல்லூரியில் சேர்ந்த உடன் அனைத்து மாணவ, மாணவிகளுக்கும் நூலக அட்டை வழங்கப்படும். இந்த அட்டைக்கு மாறாக வழங்கப்படும் புத்தகங்களையும் செலுத்தவேண்டிய அபராதத் தொகை ஏதாவது இருந்தால் அதையும் செலுத்திய பின் நூலக அட்டையும் அதனுடன் விண்ணப்பங்களும் முறையாக மாணவர்களுக்குத் திருப்பிக் கொடுக்கப்படும். எதுவரையில் நூலக அட்டை நூலகத்தில் இருக்கிறதோ அதுவரை மாணவர்கள் அவர்கள் வாங்கும் புத்தகங்களுக்குப் பொறுப்பு ஆவார்கள். நூலக அட்டை காணாமல் போனால் உடனே எழுத்து மூலம் நூலகத்திற்குத்



தெரிவிக்க வேண்டும். ஒரு நூலக அட்டைக்கு ரூ. 10.00 வீதம் அலுவலகத்தில் செலுத்தி மாற்று அட்டையைப் பெறலாம். மாணவர்கள் அந்த அட்டையைக் கல்வி ஆண்டு இறுதியில் அதாவது பிப்ரவரி 28-ம் தேதிக்கு முன்பு நூலகரிடம் திருப்பிக் கொடுக்க வேண்டும்.

7. எந்த மாணவருக்கும் புத்தகம் பெற்ற நாளில் இருந்து 14 நாட்களுக்கு அதிகமாக புத்தகங்களைத் தன்னிடம் வைத்துக்கொள்ள உரிமையில்லை. அனுமதிக்கப்பட்ட காலத்திற்கு மேலாக புத்தகங்கள் வைத்திருக்கும் ஒவ்வொரு நாளுக்கும், விடுமுறை நாட்கள் உட்பட நாள் ஒன்றுக்கு ரூ. 1/- வீதம் அபராதம் விதிக்கப்படும். புத்தகங்களைத் திருப்பிக் கொடுக்கக் காலந்தாழ்த்திவிட்ட மாணவர்கள் அபராதத்தொகையை அலுவலகத்தில் செலுத்தி அபராத இரசீதுடன் நூலகரிடம் கொடுக்க வேண்டும். அதுவரை மாணவர்கள் நூலகத்தில் சலுகை பெறமுடியாது.

8. நூலகப் புத்தகங்களைத் தன்பெயரில் எடுத்து மற்றவர்களுக்கு இரவலாகக் கொடுக்கக்கூடாது.

9. புத்தகங்கள் பெறும்போது மாணவர்கள் நன்றாகப் பரிசோதித்துப் பார்த்து வாங்கவேண்டும். ஏதாவது குறை இருந்தால் புத்தகம் வழங்கும் எழுத்தரிடம் முறையிட வேண்டும். அப்படிச் செய்யத்தவறினால் பிறகு அக்குறை கண்டுபிடிக்கப்பட்டால் அம்மாணவர்களே அந்தக் குறைக்குப் பொறுப்பாவார்கள்.

10. புத்தகங்களை அதனுடன் கூடிய சீட்டுடன் உள்ள விபரங்களான வகுப்பு, பதிவு எண், மாணவர் பெயர், புத்தக எண்ணுடன் திருப்பித்தர வேண்டும்.

11. புத்தகம் காணாமல் போனால் அல்லது சேதம் ஏற்பட்டால் அதை வாங்கிய மாணவர் புதுப் புத்தகத்தை வாங்கி நூலகத்திற்குத் தரவேண்டும்.

12. (அ) புத்தகங்களிலும், பத்திரிக்கைகளிலும் எந்த விதமான அடிகோடிட்டுக் காட்டவோ, அதன்மேல் எழுதவோ கூடாது. புத்தகங்களைக் கிழிக்கவோ சேதப்படுத்தவோ கூடாது.

(ஆ) புத்தகச் சீட்டுகளைக் கிழிக்கவோ அல்லது சிதைக்கவோ கூடாது. எந்தவித பாதிப்போ மண்கறையோ புத்தகச் சீட்டுகளுக்கு ஏற்பட்டால் அதற்குரிய அபராதம் விதிக்கப்படும்.

13. நூலகர் பட்டியல் தயாரிக்கப்படும் பொருட்டு அல்லது வேறு சில காரணங்களுக்காகப் புத்தகங்களை எந்த நேரத்திலும் காலவரையறை முடியும் முன் திருப்பிக் கேட்கலாம்.

14. நூலகர் சில சமயங்களில் குறிப்பிட்ட புத்தகங்களைக் குறிப்புப் புத்தகங்களாக ஒதுக்கலாம். அடையாள அட்டைக்குப் பதிலாக வாங்கும் புத்தகம் அல்லது பத்திரிக்கைகளை நூலகத்திற்கு வெளியே எடுத்துச் செல்ல அனுமதிக்கப்பட மாட்டாது.

15. பத்திரிக்கைகளை அதற்கான மேசைகளில் இருந்து எடுக்கக்கூடாது. நூலகத்தின் உள்ளே படிக்க அனுமதி உண்டு. பத்திரிக்கைகளை கத்தரிக்கவோ வேறு ஏதாவது நூலகச் சொத்துக்கு கெடுதல் விளைவிக்கவோ கூடாது.

16. அபராதம் உட்பட அனைத்து கட்டணங்களையும் கல்லூரி அலுவலகத்தில் செலுத்தி அதற்கான இரசீதை நூலகரிடம் காட்டி நூலக அட்டையை பெற்றுக் கொள்ளலாம்.

17. நூலகத்தில் கண்டிப்பாக அமைதியைக் கடைபிடிக்க வேண்டும். அமைதிக்கு பங்கம் விளைவிப்பவர்கள் நூலகரால் வெளியேற்றப்படுவார்கள்.

18. தமிழ், ஆங்கிலப் புதினங்கள், கதைகள் விடுமுறை காலங்களில் மட்டும் விநியோகிக்கப்படும்.



## அடையாள அட்டை

1. ஒவ்வொரு மாணவருக்கும் கல்லூரியில் சேரும்போது அம்மாணவரின் புகைப்படம் ஒட்டிய அடையாள அட்டை வழங்கப்படும். அவ்வாறு வழங்கப்படும் போது அதில் உள்ள விபரங்களைச் சரிபார்த்து, தவறுகள் ஏதும் இருந்தால் உடனடியாக அலுவலகத்தில் தெரிவித்து சரி செய்து கொள்ள வேண்டும்.

2. அடையாள அட்டையைக் கல்லூரியால், நடத்தப்பெறும் அனைத்துத் தேர்வுகள் எழுதும் பொழுதும், நூலகத்திலிருந்து நூல்களைப் பெறும் பொழுதும் கண்டிப்பாகக் கொண்டு வரவேண்டும். பணவிடை போன்ற அஞ்சல் துறை தொடர்பானவற்றிற்கும், கல்வி உதவிப்பணம் பெறும்பொழுதும் மாணவரை உறுதிப்படுத்த அடையாள அட்டை இன்றியமையாததாகும். அடையாள அட்டை இல்லாதவர்கள் நூலகத்தில் நூல்களைப் பெறுவதற்கும் தேர்வு எழுதுவதற்கும் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

3. அடையாள அட்டையை இழந்துவிட்ட மாணவர்கள், முதல்வருக்கு எழுத்து மூலம் தெரிவித்து, கல்லூரி அலுவலகத்தில் ரூ.50/- செலுத்தி மாற்று அடையாள அட்டை பெறவேண்டும். அடையாள அட்டை இல்லாதவர்கள் கல்லூரிக்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

## கல்லூரிச் சான்றிதழ்கள்

1. படித்து முடித்த மாணவர்கள் கோரும் சான்றிதழ்களுக்கான விண்ணப்பங்கள் பதிவு எண், கல்வி பெற்ற காலத்துடன் வரவேண்டும். அஞ்சல் மூலம் அனுப்பப்பட வேண்டும் என்றால் சுயவிலாசம் எழுதப்பட்ட அஞ்சல் உறையுடன் விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும்.

2. பொதுவாக 3 நாட்கள் முன்னதாகவே விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டும்.

3. தேர்ச்சி பெற்றதற்கான அல்லது தகுதி பெற்றதற்கான சான்றிதழ்கள் பல்கலைக் கழகத்திலிருந்து மட்டுமே பெற வேண்டும்.

## சான்றிதழ்கள் கட்டணம்

1. கல்லூரியை விட்டு விலகிச் செல்லும் மாணவர்கள் மாற்றுச் சான்றிதழ் பெற ரூபாய் 100/- கட்டணம் செலுத்த வேண்டும்.
2. நன்னடத்தைச் சான்றிதழ் பெற ரூபாய் 10/-
3. வயதுச் சான்றிதழ் பெற ரூபாய் 10/-
4. மாற்றுச் சான்றிதழ் பெற ரூபாய் 10/-
5. சான்றிதழ் பிரதிகள் பெற ஒவ்வொரு பிரதிக்கும் ரூபாய் 10/-
6. உறுதிமொழிச் சான்றிதழ் பெற ரூபாய் 10/-

கல்லூரியிலிருந்து விலகி 3 ஆண்டிற்குப் பிறகு விண்ணப்பித்தால் கூடுதல் கட்டணமாக ரூபாய் 10/- செலுத்த வேண்டும்.

## IX. கல்வி உதவித் தொகைகள்

1. மாநில அரசு கல்வி உதவித்தொகை பின்தங்கிய, மிகவும் பின்தங்கிய, சீர்மரபினர் மாணவர்களுக்கு வழங்குகிறது. அவர்களின் பெற்றோர் பாதுகாவலர்களுடைய ஆண்டு வருமானம் ரூ.50,000/-க்குள் இருக்க வேண்டும்.

(அ) மிகவும் பின்தங்கிய, சீர் மரபினர் மாணவர்களின் பெற்றோர் வருமானம் ரூ. 50,000/-க்குமேல் இருந்தாலும் அவர்களுக்கும் படிப்புக் கட்டணம், தேர்வுக் கட்டணம், ஆய்வுக் கட்டணம், புத்தகக் கட்டணம் முதலியவை வழங்கப்படும்.



(ஆ)அரசு ஆணை (நிலை) எண். 82 நாள் 26.04.90-ல் பிற்பட்டோர் குடும்பத்தைச் சார்ந்த மாணவர்களுக்கு இளங்கலை பட்டப்படிப்பு வரையில் கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு படிப்புக் கட்டணம், சிறப்புக் கட்டணம், தேர்வுக் கட்டணம் மற்றும் பிற கட்டாயக் கட்டணம் ஆகியவைகளைச் செலுத்துவதிலிருந்து விலக்களித்து இலவசக் கல்வி வழங்கப்படும் என்று அரசு ஆணையிட்டுள்ளது.

பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த மாணவரின் பெற்றோர் அல்லது உடன்பிறப்புகள் அந்தக் குடும்பத்தில் இதுவரையில் யாரும் பல்கலைக்கழகப் பட்டம் பெறாதவர்களாக இருக்க வேண்டும்.

(இ)பெற்றோர் அல்லது பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ. 50,000/- அல்லது அதற்குக் குறைவாக இருக்க வேண்டும்.

(ஈ)சலுகை பெறுபவர் அந்தக் குடும்பத்தைச் சார்ந்த இளங்கலைப் பட்டப்படிப்புப் பயில இருக்கும் முதல் மாணவ, மாணவியராக இருக்க வேண்டும்.

2. மத்திய அரசுக் கல்வி உதவித்தொகை இந்து தாழ்த்தப்பட்ட மற்றும் மலைவாழ் மக்கள் சமுதாயத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு வழங்கப்படுகிறது. முழுக்கல்வி உதவித்தொகை பெற அவர்களுடைய பெற்றோர்கள் அல்லது பாதுகாவலர்கள் ஆண்டு வருமானம் ரூ. 1,00,000/-க்குள் இருக்க வேண்டும்.

3. கிறித்துவ மதம் மாறிய தாழ்த்தப்பட்ட மற்றும் மலைவாழ் மக்கள் மாணவர்கள் மாநில அரசின் உதவித் தொகை பெறத் தகுதியுள்ளவர்கள். அவர்கள் பெற்றோர் அல்லது பாதுகாவலர்கள் ஆண்டு வருமானம் ரூ. 1,00,000/ -க்கும் குறைவாக இருக்க வேண்டும்.

மாநில, மத்திய அரசுகளின் கல்வி உதவித்தொகை கோரி விண்ணப்பிக்கும் மாணவர்கள் (ஆதிதிராவிட, பழங்குடி, மதம் மாறிய ஆதிதிராவிடர், சீர்மரபினர், பிற்பட்டோர், மிகவும் பிற்பட்டோர்) முந்தைய ஆண்டில் வேலை நாட்களில் 75% அல்லது அதற்கு மேலாக வருகை தந்து இருக்கவேண்டும்.

## 4. ஆதி திராவிடர்களுக்கான மானிய, கல்வி உதவித்தொகை

கல்லூரி விடுதியில் தங்கிப்படிக்கும் ஆதி திராவிடர் மற்றும் மலைவாழ் சமுதாய (கிறித்துவ மதம் மாறியவர்கள் உட்பட) மாணவர்கள் இந்த மானிய கல்வி உதவித் தொகைக்குத் தகுதியானவர்கள் ஆவார்கள். பெற்றோர்கள் ஆண்டு வருமானம் ரூ. 1,00,000/-க்குள் இருக்க வேண்டும்.

## 5. தேசிய தகுதி உதவித்தொகை மைய அரசுத் திட்டம்

ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையிலான தேசியத் தகுதி உதவித்தொகைகள் இம்மாநிலத்தைச் சேர்ந்த 11வது, 12வது, பட்டப்படிப்பு, தொழிற்கல்வி படிக்கும் மாணவர்களுக்கு ஒப்பளிப்பு செய்யப்படுகிறது. இதற்குப் பள்ளி இறுதித்தேர்வு, 12வது பட்டப்படிப்புத் தேர்வுக்கான முடிவுகள் அடிப்படையில் மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். மாணவர்களின் மதிப்பெண்களின் அடிப்படையில் தேர்வு நடத்தும் அமைப்புகளிடம் இருந்து பெறப்படுகிறது. மாணவர்களின் பெற்றோர்கள் அரசு விதிக்கும் வருமான நிபந்தனையைப் பூர்த்தி செய்திருந்தால் அம்மாணவர்களுக்கு ஒவ்வொரு மாதமும் உதவித் தொகை கிடைக்கும். பெற்றோர்கள் வருமான நிபந்தனையைப் பூர்த்தி செய்யாவிடில் அம்மாணவர்கள் வேறு ஏதும் உதவித் தொகை



பெறாதிருப்பின் ரூ. 100/- பரிசுத் தொகையும், தகுதிச் (மெரிட்) சான்றிதழும் கொடுக்கப்படும். வருமான வரம்பு 30% கழிப்பு அல்லது ரூ. 10,000/- நீங்கலாக ஆண்டு வருமானம் ரூ. 25,000/-

## 6. பள்ளி ஆசிரியர் குழந்தைகளுக்கான மாநில கல்வி உதவித்தொகை

பள்ளி ஆசிரியர் குழந்தைகளுக்குக் கல்வி உதவித்தொகை வழங்கப்படும். இதற்கான விண்ணப்பங்கள் செய்தித்தாள்கள் மூலம் பிரசுரிக்கப்படும். தருவிக்கப்பட்ட விண்ணப்பங்களை ஒன்று சேர்த்துத் தகுதி அடிப்படையில் பட்டியல் தயார் செய்யப்படும். ஒரு குறிப்பிட்ட அளவான கல்வி உதவித் தொகை 11-ம் வகுப்பிலிருந்து தொழிற்பயிற்சிக் கல்வி வரை வழங்கப்படும்.

## 7. மாநில தகுதி கல்வி உதவித்தொகை திட்டம்

பத்தாவது, மெட்ரிகுலேஷன் AISLE, CBSE, AISSE தேர்வுகளில் முதன்மையாக வரும் மாணவர்களுக்கு இந்தக் கல்வி உதவித்தொகை பெற்றோர்கள் வருமானத்தைக் கருத்தில் கொள்ளாது வழங்கப்படும். இந்தக் கல்வி உதவித் தொகை 11-ம் வகுப்பிலிருந்து தொழிற்பயிற்சிக் கல்வி படிக்கும் வரை கிடைக்கும்.

## 8. சுதந்திரப் போராட்ட வீரர்களின் குழந்தைகளுக்கான கல்வி உதவித்தொகை

இந்தியாவின் சுதந்திரத்திற்காகப் பாடுபட்டு மூன்று மாதம் சிறை சென்றவர்களின் குழந்தைகள் இந்தக் கல்வி உதவித் தொகையைப் பெறத் தகுதி உள்ளவர்கள் ஆவார்கள். இதைத் தவிர கல்லூரி, தொழிற்பயிற்சிக் கல்விக்கான கட்டணச் சலுகைக்கும் தகுதியாவார்கள்.

9. முன்னாள் இராணுவத்தினர்குழந்தைகளுக்கான கல்வி உதவித்தொகை

இராணுவத்தில் பணிபுரிகின்றவர்களைச் சார்ந்தவர்களின் குழந்தைகளுக்காகவும், முன்னாள் இராணுவத்தினரின் குழந்தைகளுக்காகவும் இந்தக் கல்வி உதவித்தொகை வழங்கப்படும். கட்டணச் சலுகை விதிகளுக்கும், நிபந்தனைகளுக்கும் உட்பட்டவை.

10. இலங்கையில் இருந்து வந்த அகதிகளின் குழந்தைகளுக்கான கல்வி உதவித்தொகை

கல்லூரி பட்ட வகுப்புகளில் பயிலும் இலங்கை அகதிகளின் குழந்தைகளுக்காக இந்தக் கல்வி உதவித்தொகை வழங்கப்படும். கட்டணச் சலுகை, உதவித்தொகை சில விதிகளுக்கும், நிபந்தனைகளுக்கும் கட்டுப்பட்டவை.

11. தேசிய கடன் கல்வி உதவித்தொகை

வருமானம் தகுதி அடிப்படையில் இந்த உதவித்தொகை வழங்கப்படுகிறது. பெற்றோர்களின் ஆண்டு வருமானம் ரூ. 25,000/-க்கு மேல் இருக்கக்கூடாது. இதற்கான விண்ணப்பங்கள் ஒவ்வொரு ஆண்டும் முதன்மையான செய்தித்தாள்கள் மூலம் பிரசுரிக்கப்படும்.

12. உடனடி தகுதி மான்யக் கல்வி உதவித் தொகை

ரூ.300/- உதவித்தொகை தாழ்த்தப்பட்ட மலைவாழ், கிறித்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் சமுதாயத்தைச் சேர்ந்த, ஒரே முயற்சியில் மேல்நிலைப்பள்ளி இறுதி வகுப்பில் 60% மதிப்பெண்களுடன் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு முதல் ஆண்டில் கிடைக்கும். அதற்கு வருமான வரம்பு மீண்டும் புதுப்பிக்கப்பட வேண்டிய அவசியமும் இல்லை.



13. தமிழ்நாடு கல்வி அறக்கட்டளை உதவித் தொகை

எந்தவொரு கல்வித் உதவித் தொகையும் பெறாத மாணவ மற்றும் மாணவிகள் பெற்றோர் அல்லது பாதுகாவலர் ஆண்டு வருமானம் ரூ.24,000/-க்கு மிகாமல் இருந்தால் இளங்கலைப் பட்டம் பயில்பவர்கள் மற்றும் முதுகலை பட்டம் பயில்பவர்கள் முதல்வர் மூலம் விண்ணப்பித்து இத் திட்டத்தின் கீழ் பயன் பெறலாம்.

14. மத்திய அரசின் சிறுபான்மையினருக்கான கல்வி உதவித்தொகை

கிறித்துவ, இஸ்லாமிய, பௌத்த, பாரசீக மற்றும் சீக்கிய மதத்தைச் சார்ந்த மாணவ மற்றும் மாணவிகளின் பெற்றோர் அல்லது பாதுகாவலர் ஆண்டு வருமானம் ரூ.2,00,000/- க்கு மிகாமல் இருந்தால் இந்த உதவித் தொகையை இளங்கலை மற்றும் முதுகலை மாணவர்கள் பெறலாம். (www.momascholarship)

15. மாநில கல்லூரி உதவித்தொகை

இந்தத் தலைப்பின் கீழ் பின்வரும் கல்வி உதவித் தொகைகள் வழங்கப்படுகிறது.

1. பொது
2. முதுநிலை
3. சிறப்பு மொழிக்கல்வி உதவித்தொகை (தமிழ், தெலுங்கு)
4. முஸ்லீம்களுக்கானச் சிறப்பு கல்வி உதவித்தொகை.
5. விதவைகளுக்குச் சிறப்பு உதவித் தொகை.
6. லேடி வில்லிங்டன் பயிற்சிக் கல்லூரியின் சிறப்பு உதவித்தொகை.
7. கிழக்காசிய மொழி பயில்பவர்களுக்குச் சிறப்பு உதவித்தொகை.
8. இராணி மேரி கல்லூரியின் சிறப்பு உதவித்தொகை.
9. ஆங்கிலேய இந்தியர்களுக்குச் சிறப்பு உதவித் தொகை.

எந்தக் கல்வி உதவித்தொகையும் பெறாத மாணவர்கள் தகுதி உள்ள ஏதாவது ஒரு கல்வி உதவித் தொகைக்காக கல்லூரி முதல்வர் மூலம் விண்ணப்பிக்கலாம். அவர்களின் பெற்றோர்களின் ஆண்டு வருமானம் ரூ. 12,000/-க்குக் கீழாக இருக்க வேண்டும். ஆண்டுக்கு ரூ. 270/- உதவித்தொகையாகக் கிடைக்கும். வரிசை எண் (6)க்கு, அதற்காக ரூ.135/- கிடைக்கும்.

## 16.பட்டமேற்படிப்பு பயிலும் மாணவர்களுக்கான சிறப்பு கல்வி உதவித்தொகை

அங்கீகரிக்கப்பட்ட ஆரம்ப, நடுநிலை மற்றும் உயர்நிலைப்பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களின் பிள்ளைகளுக்கான படிப்பு உதவித்தொகைத் திட்டத்தின் கீழ் முதுநிலை பட்டப்படிப்பு பயிலும் மாணவர்களுக்கு அவர்களது பெற்றோர்களின் ஆண்டு வருமானத்தைக் கணக்கில் கொள்ளாது படிப்பு உதவித்தொகை அளித்திட அரசு அனுமதி அளித்துள்ளது. 1995 மே அதற்குப் பிறகு நடைபெற்ற இளநிலை பட்டவகுப்புத் தேர்வுகளில் 60% க்குக் குறையாமல் மதிப்பெண் பெற்றவர்கள் இவ்வுதவித் தொகை பெறத் தகுதியுடையவராவர்.

மேற்கண்ட உதவித்தொகைகளுக்குரிய விண்ணப்பங்கள் கல்லூரி அலுவலகம் அறிவிக்கும் இறுதி நாளுக்குள் கல்லூரி அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். கல்லூரி அலுவலகம் குறிப்பிடும் இறுதி நாளுக்குப் பின் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் எத்தகைய காரணத்தை முன்னிட்டும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.



## 17. சலுகைகள் / நிதி உதவிகள்

**மாணவர் பெறும் அரசுச் சலுகைகளும் இதர உதவித் தொகைகளும்**

(A) தமிழ் நாடு கல்விச் சட்டம் 92ன் கீழ் உள்ள சலுகை

தமிழ்நாடு கல்விச்சட்டத்தின் கீழ் சில குறிப்பிட்ட வகுப்பைச் சார்ந்த மாணவர்கள் முழுக்கட்டணச் சலுகை அல்லது அரைக்கட்டணச் சலுகை பெறத் தகுதி உடையவர் ஆவார். இது பற்றிய முழு விவரமும் கல்லூரி அலுவலகத்தில் கிடைக்கும்.

இச்சலுகைகள் சட்ட வரம்பிற்கு உட்பட்டு வழங்கப்படும். மாணவர்கள் இச்சலுகைக்கான விண்ணப்பத்தை ஒவ்வோர் ஆண்டும் ஆகஸ்டு முதல் தேதிக்குள் கொடுக்க வேண்டும். அதற்கான விண்ணப்பம் கல்லூரி அலுவலகத்தில் கிடைக்கும்.

உதவித் தொகை மற்றும் சலுகைகள் குறிப்பிட்ட வகுப்பைச் சார்ந்த மாணவர்களுக்கு மட்டுமே வழங்கப்படும். இவர்கள் கடந்த கல்வி ஆண்டில் 90% வருகைப் பதிவு பெற்றிருக்க வேண்டும். புதிதாக சேரும் மாணவர்கள் இறுதியாகப் படித்த கல்வி நிலையத்தின் தலைவரிடமிருந்து பெறப்பட்ட வருகைப் பதிவுச் சான்றிதழ் தர வேண்டும்.

# X. கல்லூரி மாணவர் பேரவை அமைப்பு விதிமுறைகள்

இந்த அமைப்பு 'நேரு நினைவுக் கல்லூரி மாணவர் பேரவை' என அழைக்கப்படும்.

### 1. குறிக்கோள்கள்

அ. மாணவர்களிடையே பண்பாடு, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு மற்றும் தனித்திறமைகள் முதலியவற்றை வளர்த்தல்.

ஆ. நவீன அறிவியல், தொழில்நுட்பம் முதலியவற்றில் மாணவர்களின் அறிவுத்திறனை மேம்படுத்தும் வகையில் கூட்டங்கள், கருத்தரங்குகள், பயிலரங்குகள், விவாத மேடைகள், பேச்சுப் போட்டிகள், வினாடிவினா நிகழ்ச்சிகள் முதலியவற்றை நிகழ்த்துதல்.

இ. மக்களாட்சியின் மகத்துவத்தினை உணரவும், மக்களாட்சித் தத்துவத்தின் அடிப்படையில் முடிவுகள் எடுத்துச் செயல்படவும் பயிற்சி அளித்தல்.

## 2. கல்லூரிப் பேரவையின் சார்பு மன்றங்கள்

(Constituents of the College Union)

i. இலக்கிய மன்றம்
ii. இயற்பியல் துறை மன்றம் (இளநிலை)
iii. இயற்பியல் துறை மன்றம் (முதுநிலை)
iv. கணிதத் துறை மன்றம்
v. கணினி அறிவியல் துறை மன்றம்
vi. பொருளியல் துறை மன்றம்
vii. வணிகவியல் துறை மன்றம்
viii. விலங்கியல் துறை மன்றம்
ix. வேதியியல் துறை மன்றம்

## 3. பேரவை நிர்வாகிகள்

அ. கல்லூரிப் பேரவையின் அனைத்து அமைப்புகளுக்கும் கல்லூரி முதல்வர் அலுவலக சார்பான முறையில் தலைவர் (Ex-Officio President) ஆவார்.

